


டென்மார்க்கில் பிராண்டா பதி அமர்ந்த

அருள்மிகு

# ஸ்ரீலஸ்ரீ அபிராமி அம்பாள்

## வேண்டுதல் போற்றி

## இசைப்பாடல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அபிராமிதுணை

# ஸ்ரீலஸ்ரீ அபிராமி அம்பாள்

## வேண்டுதல்போற்றி இசைப்பாடல்கள்

ஆக்கியோர்:

திரு.வேலணையூர் பொன்னண்ணா

திருமதி. செ. தம்பிப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- "ஸ்ரீலஸ்ரீ அபிராமி அம்பாள் வேண்டுதல்போற்றி இசைப்பாடல்கள்"

ஆக்கியோர்: திரு.வேலணையூர் பொன்னண்ணா
திருமதி.செ. தம்பிப்பிள்ளை

- வெளியீடு; முதற்பதிப்பு – ஆனி. 1995

முகவரி; M.Vimalanathan
Trigecentervej-585 t.h
8380 Trige
Denmark.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

தேவிதுணை

**கணபதி துணை**

தே[illegible]ழென்செய்யும்!
தீண்டிய விசம்தானென்செய்யும்!
கோழென் செய்யும்!
கொடுங்கோலன்தானென்செய்வான்!
வினையென்செய்யும்!
செய்வினைதானென்செய்யும்!
வேழமுகத்தான் என்நெஞ்சத்துள்
வீற்றிருக்கையிலே.

**பற்றுக கரம்நீட்டி**

வெள்ளை(த்) துயிலுடுத்து – என்
வெள்ளைநிற
உள்ளக்கமலமதில் வீணையுடன்
வீற்றிருக்கும்
அன்னையே கலைவாணி!
உன்பாத அர்ச்சனைக்கே – உன்
பிள்ளையிவன் தந்த பா......!
பற்றிடுக கரம்நீட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

தேவிதுணை

# முன்னுரை

அன்னை அபிராமி அடியார்களே!

"அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்." என்று தமிழ் அன்னைப் பாட்டி ஔவைப்பாட்டியின் பாடல்கள் நமக்குச் சொல்லித்தருகின்றன. இதில் இரண்டு முன்னறி தெய்வங்களான மாதா, பிதா என்னும் இருவரும் இரண்டு தெய்வங்கள்தான்.இருந்தும் அன்னையைத்தான் முன்னதாகச் சொல்லியிருக்கின்றார்.

இங்கே (தைத்திரியோப நிஷதமும்) மாதாவைத் தெய்வமாக கொள்வாயாக. பிதாவைத் தெய்வமாகக்கொள்வாயாக என்றே சொல்கின்றது.

ஆகவே தாயாரைத் தெய்வமாக நினைக்கமுடியுமானால் தெய்வத்தை தாயாக நினைக்கமுடியும். ஏனென்றால் சர்வலோகங்களையும் படைத்து, காத்து அருள்பாலித்துக்கொண்டிருக்கின்ற மகாசக்தியை அன்னையின் வடிவமாகவே உலகில் அன்றும், இன்றும்,அனைத்தும் போற்றிப் புகழ்ந்து வணங்கப்பட்டு வருகின்றது. அதனால் சக்தியின் வடிவாம் அம்பாள் என்கின்றோம்.

எல்லாமாக ஆகியிருக்கின்ற சக்தியின் மறுஉருவமான அன்னைபராசக்தி நாம் நம் உள்ளத்தில் பதிக்கும் வடிவத்தில் நினைக்கும் உருவத்தில் நம்முன் காட்சிதந்து நம் துயர் துடைக்கும் சக்திபெற்றவள். ஆதிசிவனைக்கூட தனதுபாதியாக்கி அகிலத்தை ஆட்கொண்டவள்; பிள்ளைகளாகிய எம்மைமட்டும் மறந்துவிடுவாளா? அம்மாவுக்கும் நமக்கும் உள்ள அன்புபோன்று அன்னை பராசக்திக்கும் நமக்கும் உள்ள அன்பும் ஒரு அலாதியானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே அம்மாவின்மேல் நாம் எத்துணை அன்புவைத்துள்ளோமோ அதில்சிறிதளவும் குறையாத அன்புடன் நாம் நம்பிக்கை என்னும் கடலில் மூழ்கி அன்னையை வேண்டுதல் செய்தால் நம் குறைதீர்ப்பதோடு, நம் நோய்நொடி நீக்குவதோடு என்றும் எம்வாழ்வுக்கு வழிகாட்டியாக ஒரு அன்னையாய் பணிவிடைசெய்வாள் எனபதை நினைவில் கொள்வோமாக.

லோகம்முழுவதையும் தன்னகத்தே கொண்ட தாயாக இருந்து அநுக்கிரகம்செய்கின்ற அன்னை பராசக்தியின் ஒருவடிவமே, ஒருபெயரே "அபிராமி" அன்னையாகும். அவள் இன்று எங்களைத்தேடி எங்கள்துன்பங்களைத்தீர்க்க, துயரங்களைப்போக்க குளிர்நாடாம் டென்மார்க்கின் பிறண்டா பகுதியில் குடிகொள்ள வந்துள்ளாள். வந்ததுமட்டுமல்லாமல் பலபல அற்புதங்களை நம்கண்ணுக்கு காட்டி பலரின் துன்பங்களை போக்கி அருள்பாலித்தவண்ணம் இருக்கின்றாள். அவளுக்காக அவளின் உத்தரவின்பேரிலே இந்த பாமாலைகளை அவளுக்கு ஒப்புவிக்க எண்ணி எழுதி அச்சிட்டு உங்கள்முன் தந்துள்ளோம்.

அன்னை அபிராமி எப்போதும் பாடல்களில் விருப்பம் கொண்டவள். இயற்கையின் வனப்பில் இன்னிசையில் குடியிருக்கும் மனம்கொண்டவள்.
ஆகவே இப்பாடல்களைப்பாடி தினமும் அவளைவேண்டுதல் செய்யும் பக்தர்களை என்றும் அவள் காத்து நிற்பாள்.

நம்புங்கள்.
தொடர்ந்து அவள் பணிக்கு உதவுங்கள்.
நன்மை என்றும் உங்களுக்கே!
என்றுகூறி விடைபெறுகின்றேன்.

என்றும் உங்கள்பணியில் ஒருவன்
பொன்னண்ணா.
Billund
Denmark.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
அபிராமிதுணை

## விருத்தம்

1

சீர்கொண்ட டென்மார்க்
பிறாண்டா பதியுறைந்த
பேர்கொண்ட அபிராமி பார்வதி
பராசக்தி பரமசிவன் தேவி
பங்கையர் செல்வி உன்னபய மருள்தாயே
கார்முகில் காணாத பயிராகி நொந்தால்
காப்பாற்றவே உன்னருள் ஊற்றைத் திறப்பாய்
நின்மக்கள் நீர்வற்றுக் குளமாகி
நின்று துயருற்றால் நின்கருணை அருள்மாரி
தந்தருள்வாய் தாயே! தாயே! தாயே!

2

ஓம் சக்தி! ஓம்சக்தி!
ஓம் சக்தி! ஓம்..ம் ம்!
சக்தி ஓம்! சக்தி ஓம்!
சக்தி ஓம்! சக்தி ஓம்!
சக்தி பரா! சக்தி ஓம்!
சக்தி பரா! சக்தி ஓம்!
ஓம் பரா! சக்திஓம்!
ஓம் பரா! ஓம் பரா சக்தி ஓம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

அன்னையே! அக்கினியே!
அன்னை பரா சக்தியே!
முக்கனியே! முத்தமிழே!
முப்புரத்து தேவியே!
சூலியே! சுந்தரியே – பாவங்கள்
சுட்டெரிக்கும் தாயே!
ஆதிசிவன் பாதியே அங்கையர்க்கண்ணியே!
மாயவன் தங்கையே! மாகாளி அம்மையே!
இன்னிசையில் நடம்புரியும்
எங்கள் அபிராமியே!

4

ஓடி வா! ஓடி வா! அம்மா!
எங்களை
நாடிவா! நாடிவா! அம்மா!
எங்களை தேடிவா! தேடிவா! அம்மா!
உந்தன்
பக்தர்குறை தீர்த்திடவே அம்மா!
எங்கள்
பாவங்களை போக்கிடவே அம்மா!
ஓடிவா! ஓடிவா! அம்மா!
எங்களை
நாடிவா! நாடிவா! அம்மா!
எங்களை
தேடிவா! தேடிவா! அம்மா!
ஓடிவா! ஓடிவா! அம்மா!
ஓடிவா! ஓடிவா! அம்மா!
அம்மா அம்மா அபிராமியம்மா!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பறந்தோடி வந்திடம்மா

வேப்பமர நிழலில்
மாரியம்மா அபிராமியம்மா
வீற்றிருப்பாய் எங்களம்மா
மாரியம்மா அபிராமியம்மா

கற்பூரச் சட்டியிலே
மாரியம்மா அபிராமியம்மா
காற்றோடு கலந்திருக்கும்
மாரியம்மா அபிராமியம்மா.

உடுக்கின் ஒலியினிலே
மாரியம்மா அபிராமியம்மா.
ஓங்காரம் நீ பெறுவாய்
எங்களம்மா அபிராமியம்மா.

பிள்ளைகள் தவறுசெய்தால்
எங்களம்மா அபிராமியம்மா.
பெற்றவள் நீ பொறுத்திடுவாய்
எங்களம்மா அபிராமியம்மா.

மாவிளக்கு ஏற்றுகின்றோம்
மாரியம்மா அபிராமியம்மா – உன்
மக்கள்குறை தீர்த்திடுவாய்
எங்களம்மா அபிராமியம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கல் படைக்கின்றோம்
எங்களம்மா அபிராமியம்மா– உன்னை
போற்றிப் படிக்கின்றோம்
மாரியம்மா அபிராமியம்மா.

முற்றிய கரும்போடு
மாரியம்மா அபிராமியம்மா
முக்கனியும் படைக்கின்றோம்
எங்களம்மா அபிராமியம்மா.

தங்கத்தேர் இல்லையடி
எங்களம்மா அபிராமியம்மா
எங்கள் நெஞ்சத்தேர் ஏற்றுகின்றோம்
வாடியம்மா ஓடிவாடியம்மா.

நீரற்றபயிராகி உன்மக்கள்
வாடித்தான் நிற்கின்றார் – உனைநாடி
ஓடி நீ வந்திடுவாய் மாரியம்மா
உன்னருளை தந்திடுவாய் அபிராமியம்மா.

பிள்ளைகள் அழுங்குரலைக்கேட்டு
பெற்றவளே நீ எங்களம்மா அபிராமியம்மா
பறந்தோடி வந்திடு நீ
மாரியம்மா அபிமாரியம்மா.

கூடிஅழைக்கின்றோம்
மாரியம்மா அபிமாரியம்மா–கை
கூப்பி அழைக்கின்றோம்
மாரியம்மா அபிமாரியம்மா
ஓடி நீ வந்திடுவாய் மாரியம்மா
உன்பக்தர்குறை போக்கிடவே அபிராமியம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரேறி வீதி வரா
தாயே அபிராமி எங்கள்
தாயே அபிராமி உந்தன்
தேசநிலை கண்டிடுவாய்
தாயே அபிராமி– எங்கள்
தாயே அபிராமி.

பாராண்ட உந்தனினம்
தாயே அபிராமி
பாரெல்லாம் அகதியம்மா
தாயே அபிராமி–இன்று
பார்! எல்லாம் அகதியம்மா
தாயே அபிராமி.

வேப்பிலைக்குள் ஒளிந்திருக்கும்
தாயே அபிராமி–எங்கள்
தாயே அபிராமி–மக்கள்
வேதனையை தீர்த்திடுவாய்
தாயே அபிராமி–எங்கள்
தாயே அபிராமி.

குங்குமத்தில் ஒளிந்திருக்கும்
தாயே அபிராமி–எங்கள்
தாயே அபிராமி–மக்கள்
குறைகளை நீ போக்கிடுவாய்
தாயே அபிராமி–எங்கள்
தாயே அபிராமி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்கரத்தில் ஒளிந்திருக்கும்
தாயே அபிராமி – எங்கள்
தாயே அபிராமி – மக்கள்
சங்கடத்தை தீர்த்திடுவாய்
தாயே அபிராமி – எங்கள்
தாயே அபிராமி.

சிங்கத்தில் வீற்றிருக்கும்
தாயே அபிராமி – எங்கள்
தாயே அபிராமி – எங்கள்
சீரழிவைத் தடுத்திடம்மா
தாயே அபிராமி – எங்கள்
தாயே அபிராமி.

இடபத்தில் வீற்றிருக்கும்
தாயே அபிராமி – எங்கள்
தாயே அபிராமி – எங்கள்
இன்னல்களை நீக்கிடுவாய்
தாயே அபிராமி – எங்கள்
தாயே அபிராமி.

நாகத்தில் வீற்றிருக்கும்
தாயே அபிராமி – எங்கள்
தாயே அபிராமி – எங்களுக்கு
நல்லருள் புரிந்திடுவாய்
தாயே அபிராமி – எங்கள்
தாயே அபிராமி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்குலம் காத்திடவே
தாயே அபிராமி – எங்கள்
தாயே அபிராமி – நீயும்
தேடியொரு வேல்கொடுத்தாய்
தாயே அபிராமி – எங்கள்
தாயே அபிராமி.

தமிழர்குலம் காத்திடவே
தாயே அபிராமி – எங்கள்
தாயே அபிராமி – இன்னும்
தட்டாமல் பிரம்பெடம்மா
தாயே அபிராமி – எங்கள்
தாயே அபிராமி.

உன்னைத் தோள்சுமந்த பக்தரெல்லாம்
தாயே அபிராமி – எங்கள்
தாயே அபிராமி – இங்கு
திசைமாறிப் போகின்றாரே
தாயே அபிராமி – எங்கள்
தாயே அபிராமி.

போனவர் தேடிவர
தாயே அபிராமி – எங்கள்
தாயே அபிராமி
தேவி நீ அருள்கொடம்மா
தாயே அபிராமி – எங்கள்
தாயே அபிராமி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருநாகம் குடைபிடிக்க
தாயே அபிராமி – எங்கள்
தாயே அபிராமி
கருடன் உனைச் சுமப்பான்
தாயே அபிராமி – எங்கள்
தாயே அபிராமி.

பறந்தோடி வந்திடம்மா
தாயே அபிராமி – எங்கள்
தாயே அபிராமி – உன்
பக்தர்களை காத்திடவே
தாயே அபிராமி – எங்கள்
தாயே அபிராமி.

ஆறுகடல் தாண்டி நீயும்
தாயே அபிராமி – எங்கள்
தாயே அபிராமி
அமர்ந்திடவே பிராண்டா வந்தாய்
தாயே அபிராமி – எங்கள்
தாயே அபிராமி.

பத்தினிக்குள் அமர்ந்திருக்கும் பத்தினியே!
தாயே அபிராமி – எங்கள்
தாயே அபிராமி – உந்தன்
பக்தர் துன்பம் கோடியம்மா – நீயும்
பறந்தோடி வாடியம்மா – எங்கள்
தாயே அபிராமி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னீரில் தினம் குளிப்பாய்
எங்களபிராமி – அம்மா
எங்களபிராமி – நாங்கள்
கண்ணீரில் தினம் குளிக்கோம்
எங்களபிராமி – அம்மா
எங்களபிராமி.........எங்கள்

கண்ணீா துடைத்திடவே
எங்களபிராமி – அம்மா
எங்களபிராமி – நீயும்
பறந்தோடி வந்திடம்மா
எங்களபிராமி – அம்மா
எங்களபிராமி.

பூமரத்தில் குடியிருக்கும்
எங்களபிராமி – அம்மா
எங்களபிமாரி – இந்த
பூமரத்தை காத்திடம்மா
எங்களபிராமி – அம்மா
எங்களபிராமி.

இயற்கையிலே குடியிருக்கும்
எங்களபிராமி – அம்மா
எங்களபிராமி – நல்ல
இன்னிசையில் வாழ்ந்திருக்கும்
எங்களபிராமி – அம்மா
எங்கபிராமி.

வேப்பமர பீடத்திலே
எங்களபிராமி – அம்மா
எங்களபிராமி – நீ
வீற்றிருக்க வந்திடுவாய்
எங்களபிராமி – அம்மா
எங்களபிராமி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னல்களை தேடிவந்து
போக்கிடம்மா! காத்திடம்மா!

ஆயி மக மாரியம்மா!
ஆயிரம் கண்ணுடையாள்
தேவி அபிராமியம்மா
தேடியெம்மை காருமம்மா

ஆயன் சகோதரியே!
ஆத்தாளே அபிராமியம்மா
மாயன் சகோதரியே
மகாமாரி எங்களம்மா.

பத்தினியே பார்வதியே!
பரமசிவன் தேவியரே—உன்
பக்தர்குறை போக்கிடவே
பறந்தோடி வாருமம்மா.

உடுக்கை பிறந்ததம்மா
உத்தமியே உன்னடையில்
மத்தளம் பிறந்ததம்மா
மாதாவே உன்னடையில்

வேம்பும் பிறந்ததம்மா
தேவி நீ குடியிருக்க
கரும்பும் பிறந்ததம்மா
கண்ணகியே நீ சுவைக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குங்குமம் பிறந்ததம்மா
மங்கையே உன்னுதட்டில்
முத்தும் பிறந்ததம்மா
உத்தமியே உன்முகத்தில்

தமிழும் பிறந்ததம்மா
தாயே உன் மதுரையிலே
நீயும் பிறந்தாயம்மா
தீந்தமிழின் இசையினிலே.

அன்னை அபிராமியம்மா – எங்கள்
இன்னல்களை தீர்த்திடம்மா
வாடிநிற்கும் எங்களை – நீ
தேடிவந்து காருமம்மா.

தேங்காய் எலுமிச்சையோடு – அம்மா
தேடிவந்து நிற்கிறோமே....உன்
கற்பூரதீபம் காண – நாங்கள்
கால்கடுக்க நிற்கின்றோமே.

அன்னை அபிராமியம்மா – எங்கள்
இன்னல்களை தீருமம்மா.
வாடிநிற்கும் எங்களை நீ
தேடிவந்து காருமம்மா.

⁂



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சாந்தி நீ பெற்றிடவே**
**சக்தியே அபிசேகம்**

அபிசேகம் அம்மா அபிஷேகம்
அன்னையே உந்தனுக்கு –உங்கள்
அன்பாலே அபிஷேகம் – உன்
உள்ளம் குளிரவைக்க – எங்கள்
உத்தமியே அபிஷேகம்

தாயே அபிஷேகம் – முதல்
தண்ணீரால் அபிஷேகம் – அம்மா
பச்சை நெல்லு குற்றிவந்த – அரிசி
மாவிலே அபிஷேகம்

மஞ்சள்மா தானெடுத்து – தாயே
மாரியம்மா அபிஷேகம்
அபிஷேகக் கூட்டாலே – எங்கள்
அன்னை அபிராமிக் கபிஷேகம்

விபூதி அபிஷேகம் – தாயே
வீரமாகாளியே உந்தனுக்கு
சந்தனத்தால் அபிஷேகம் – அம்மா எங்கள்
சந்ததியை(க்) காக்கவென்று
குங்குமத்தால் அபிஷேகம் – அம்மா எங்கள்
குங்குமத்தை காக்கவென்று
பஞ்சாமிர்தமம்மா உந்தனுக்கு – பார்வதியே
பக்தர்களின் பாசமதை காட்டிடவே

மலைத்தேனால் அபிஷேகமம்மா
மாயவனின் தங்கையே – உனக்கு
பாலால் அபிஷேகமம்மா – எங்கள்
பாலதிரிபுர சுந்தரியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயிரால் அபிஷேகமம்மா – எங்கள்தாயே
தக்கன்மகள் தாட்ஷாயினியே
முக்கனியில் அபிஷேகம் – எங்கள்
முத்துமாரியே உந்தனுக்கு

எலுமிச்சை அபிஷேகமம்மா – எங்கள்
இமயவான் பார்வதியே
மாதுளம்பழத்தாலே அபிஷேகம் – எங்கள்
மாதாவே உந்தனுக்கு

தென்னை நீரால் அபிஷேகம் – ஈசன்
தேவியரே உன்தனுக்கு
பன்னீரால் அபிஷேகம்
மலையத்துவச பாண்டியனார் புத்திரிக்கு

இத்தனையும் உந்தனுக்கு – எங்கள்
பத்தினியே தந்துவிட்டோம் – நீயும்
கற்பூரத்தீபத்திலே – எமக்கு
காட்சிதரவேண்டுமம்மா

பச்சைமரத்து(ப்) பட்டைபோலே – நாங்களுனை
பற்றிவிட்டோம் அம்மா – இந்த
பச்சைக்குழந்தைகளின் பிணியை
பறந்தோடி வந்துகார் அம்மா – நீயும்
பறந்தோடி வந்துகார் அம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோடிபெயரில்
## குடியிருக்கும் அம்மன்

ஊரெல்லாம் குடியிருக்கும் அம்மா – எங்கள்
உள்ளத்திலே குடியிருக்க வாம்மா!
நாடெல்லாம் குடியிருக்கும் அம்மா – உனக்கு
நாலுகோடி பெயரிருக்கு அம்மா!

மதுரையிலே மீனாட்சி
காஞ்சியிலே காமாட்சி
காசியிலே விசாலாட்சி
நெமிலியிலே பாலதிரிபுர சுந்தரி – நீ அம்மா
ஓடிவந்து குடி இரம்மா – உன்
பக்தர்களை காத்திடம்மா

சமயபுரம் முத்துமாரி
சிதம்பரத்தில் சிவகாமி
மேலத்தூரில் சக்தி நீ எம்மை
நாடிவந்து காரு நீ அம்மை
ஓடிவந்து குடியிரம்மா – உன்
பக்தர்களை காத்திடம்மா

முன்னேஸ்வரத்தில் வடிவாம்பிகையாய்
நகுலேஸ்வரத்தில் நகுலாம்பிகையாய்
நயினையிலே நாகபூசணியாய்
தெல்லிப்பளையில் துர்க்காவாய்
ஊரெல்லாம் குடியிருக்கும் அம்மா
ஓடிவந்து எங்களை நீ காரம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புங்கை, வற்றாப்பளையில்
கண்ணகியாய்
லைடன்பதி மட்டுவிலில்
மாரியம்மனுமாய்
திருமலையில் வீர
பத்திர காளியுமாய்
ஊரெல்லாம் வீற்றிருக்கும் அம்மா
எங்கள் உள்ளமதில் வீற்றிருக்க வாம்மா!

வல்லை,நெல்லை, மாத்தளையில்
முத்துமாரி.......
மட்டக்களப்பில் நீயும்
மகாமாரி
கொட்டாஞ்சேனையிலே
மாரியம்மா—பிராண்டாபதியில் நீ அபிராமி
நீ குடிகொண்டு இருக்கின்ற தேவியம்மா
நீ ஓடிவந்தெம்மை காருமம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அபிராமி

ஆக்கம்:திருமதி.செ. தம்பிப்பிள்ளை

ஐங்கரனைப் பெற்றவளே எங்கள் அபிராமி
எங்கள் அண்டையிலே வந்ததென்ன ,, ,,
சுந்தரத்தமிழினிலே ,, ,,
உன்னைத் தோத்தரிக்க வந்துவிட்டோம் ,, ,,
சேய்கள் நாம் விட்டபிழை ,, ,,
தாயே நீ பொறுத்திடம்மா ,, ,,

நாடுவிட்டு நாடுவந்தோம் ,, ,,
கண்டநாடெல்லாம் வீடாச்சு ,, ,,
அண்டமெல்லாம் உன்தலையில் ,, ,,
ஆதிசேசனாகத் தாங்குகின்றாய் ,, ,,
கையெடுத்த தமிழரெல்லாம் ,, ,,
இன்று கதியற்று அகதியானார் ,, ,,

அஞ்சாத தமிழரெல்லாம் ,, ,,
இன்று அஞ்சித்தான் வாழுகின்றார் ,, ,,
தேரோடும் வீதியெல்லாம் ,, ,,
இன்று செந்நெருஞ்சிக் காடாச்சு ,, ,,
பொங்கல் வைத்த பானையெல்லாம் ,, ,,
இன்று புறக்குடமாய் போனதம்மா ,, ,,

தமிழர் கோத்திரத்தின் நற்பவளம் ,, ,,
தஞ்சம்என்றோம் கெஞ்சிநின்றோம் ,, ,,
எங்கள் தாய்நாட்டு மக்களையே ,, ,,
தயவுடனே காத்திடுவாய் ,, ,,
கோட்டையும் கோபுரமும் ,, ,,
கூடவே உனக்குண்டு ,, ,,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவெடுத்துப் பூசைசெய்ய எங்கள் அபிராமி
நல்ல பூசகரும் நாட்டிலுண்டு " "
தேசமெல்லாம் கோயிலுண்டு " "
தேடிவரும் பக்தருண்டு " "
வேப்பிலையில் பிறந்தவளே " "
எங்கள் வேதனைகள் தீர்த்திடுவாய் " "

நாதர்முடிமேலிருக்கும் " "
நாங்கள் கேட்டவரம் தந்திடம்மா " "
நாகம் குடைபிடிக்க " "
நல்லபாம்பு தாலாட்ட " "
நயினையிலே கோயில்கொண்டாய் " "
நல்லசிவன் தேவியரே " "

அன்புடனே கணபதிக்கு " "
அருமையான பழம்தந்தாய் " "
அம்மையப்பன் தெய்வமென்றாய் " "
அதை உலகுக்கு உணரவைத்தாய் " "
சூரனை அழிக்க என்றே " "
வீரவேலனுக்கு வேல்கொடுத்தாய் " "
கனபூசை கண்டுவிட்டாய் " "
காளித்தாயெனவே நீவருவாய் " "

மாயவனின் தங்கையே " "
உனக்கு மடைபோட்டுகுளிர்த்திசெய்தோம் " "
மடைபோட்ட மேடையெல்லாம் " "
இன்று தடைபோட்டு உடைத்துவிட்டார் " "
குங்குமத்தின் நாயகியே " "
தமிழர் குலப்பெருமை விளங்கவைத்தாய் " "

பாம்பாடும் பாவனையே " "
இந்தப்பனிநாட்டில் கண்டதில்லை " "
பக்தர் குறை தீர்க்க என்று " "
பாவையிவள் உருவில் வந்தாய் " "
பெருமையுடன் பிராண்டாவில் " "
உன் பேர்சொல்லிக் கொலுவிருந்தாய் " "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேப்பமரப் பீடத்திலே எங்கள் அபிராமி
வீற்றிருக்க வந்துவிட்டாய் " "
பொங்கிவரும் கடலிடையே " "
நாகம் பூவெடுக்க வைத்தாயம்மா " "
பூவெடுத்த நாகமது " "
நயினையிலே உனக்குப் பூசைசெய்து வந்ததம்மா

மங்கையிவள் வயிற்றினிலே விளைவுகண்டாய்
நல்ல மாணிக்கக் கல்லையும் உமிழ்ந்து தந்தாய்
முத்துமாரித் தாய் எங்கள் தாயம்மா
நல்லமுத்தினைப் பெற்றுப் பெரும் காட்சி தந்தாய்
காணாதகாட்சி எல்லாம் காணவைத்தாய்
இந்த கலியுகத்தில் காக்க என்று ஓடிவந்தாய்

இராமனுக்குத் தம்பியாக உருவெடுத்தாய்
வீர இராவணனின்தங்கையையும் பழி எடுத்தாய்
கொடியவினை போக்கிடவே எங்கள் தாயே
நாங்கள் கும்பிட்டோம் குறைதீர்ப்பாய் எங்கள் தாயே
உரிமையுடன் ஓடிவந்தோம் எங்கள் தாயே
உயர்வான காட்சி தந்தாய் எங்கள் தாயே
உன் கால் பிடித்தோம் காத்தருள வாருமம்மா
கடைத்தேற வழியுண்டு எங்கள் தாயே
சரணம் சரணமம்மா எங்கள் தாயே!
தாழ் பணிந்தோம் காத்திடம்மா எங்கள் தாயே!

....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிராமி அம்மன்
## போற்றி மாலை

ஆதிசிவன் தேவியே போற்றி!
அன்னை அபிராமியே போற்றி!
ஆனைமுகன் ஆறுமுகன்
அன்னையே போற்றி!
மாயவன் தங்கையே போற்றி!
மாகாளி அம்மையே போற்றி!
குளிர்நாட்டில் குடியிருக்கவந்த
குஞ்சரியே அன்னையே போற்றி!
பன்னிருகையன் அன்னையே போற்றி!
பட்டினிக்குள் மறைந்திருக்கும் அம்மையே போற்றி!
நாடிவரும் பக்தர் குறை
தேடி அகற்றிடும் அம்மையே போற்றி!
இன்னிசையில் ஆடிவரும்
ஈஸ்வரியே போற்றி!
தாய்க்குலத்தார் பெருமைசொல்லும்
தாயான மகாமாரியே போற்றி!

மீனவமன்னன் மகளான
மீனாட்சி அம்மையே போற்றி!
தர்க்கன் மகளான எங்கள்
தாட்ஷாயினி அன்னையே போற்றி!
கடற்கரையில் வீற்றிருக்கும்
கண்ணகியே போற்றி!
நாகம் தனில் ஆடிநிற்கும்
நாகேஸ்வரித்தாயே போற்றி!

போற்றி! போற்றி! போற்றியம்மா!
போற்றுகின்றோம் நாளுமம்மா!
எங்கள் குறை பொறுத்து
எம்மை என்றும் காத்திடம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரணம் சரணம்
## அன்னையே சரணம்

சரணம் சரணமம்மா!
சங்கரனார் தேவியரே—நாங்கள்
சரணம் சரணமம்மா
உன்பாதம் சரணமம்மா.

கரணம் கரணமம்மா—நீ
கைவிட்டால் கரணமம்மா
மரணம் மரணமம்மா—உன்னை
மனமெண்ணா நாட்களெல்லாம்.

பாட்டெழுத நீயும் எந்தன்
பக்கமதில் தானிருந்தாய்
பாலன் வடித்த பாட்டில்
பிழையிருந்தால் மன்னியம்மா.

பிள்ளை தவறுசெய்தால்
பெற்றவளே பொறுத்திடம்மா
கற்றவர் சபைதனிலே
கரம்தந்து காத்திடம்மா.

சரணம் சரணமம்மா
சங்கரனார் தேவியரே!
சரணம் சரணமம்மா
மாயவனார் தங்கையரே!
சரணம் சரணமம்மா
சக்தியே உன் பாதமம்மா!
சக்கியே உன் பாதமம்மா!
சக்தியே உன் பாதமம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்மிகு அபிராமிஅம்மன்
டென்மார்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org